# தமிழ்மொழியும் இலக்கியமும்

தரம் 11

பகுதி : தமிழ் இலக்கணம்

தவணை 1

தலைப்பு : எழுத்தியல்

விடய உள்ளடக்கம்

சுட்டெழுத்து

வினாவெழுத்து

இனவெழுத்து

போலி எழுத்து



MRS.KUNESWERY RAGUNATHAN
IN SERVICE ADVISOR
ZONAL EDUCATION OFFICE
JAFFNA

## சுட்டு எழுத்துகள்

அ,இ,உ ஆகிய மூன்று உயிரெழுத்துகளும் சுட்டெழுத்துகளாகும். அ,இ,உ என்னும் மூன்றும் பொருளைத் தருமிடத்து சுட்டெழுத்துகள் எனப்படும்.

அவை இரண்டு வகைப்படும்.

அவையாவன :

அகச்சுட்டு

புறச்சுட்டு

## சுட்டெழுத்து

- அகச்சுட்டு
  - அவன், இவன், உவன்
- புறச்சுட்டு
  - அக்குதிரை, இப்பெண், உவ்விடம்

## அகச்சுட்டு

உதாரணம்:

அவன், இவன், உவன்

இங்கு,

- அ,இ,உ என்னும் சுட்டெழுத்துகள் சொற்களுடன் பிரியாது சேர்ந்திருக்கின்றன.
- சுட்டெழுத்தை நீக்கினால் மிகுதி சொல்லாகாது.
- சொல்லோடு பிரிக்கமுடியாது இருக்கும் சுட்டெழுத்து “அகச்சுட்டெழுத்து” எனப்படும்.

## புறச்சுட்டு

உதாரணம்:

அக்குதிரை, இப்பெண், உவ்விடம்

இங்கு,

- அ,இ,உ எனும் சுட்டெழுத்துகள் சொல்லின் புறத்தே உள்ளன.
- சுட்டெழுத்தினை நீக்கினாலும் மிகுதி சொல்லாகும்.
- சொல்லின் புறத்தே நின்று சுட்டும் சொல் “புறச்சுட்டு” எனப்படும்.

# செயற்பாடு

பின்வரும் சொற்களை அகச்சுட்டு, புறச்சுட்டு எனப் பிரித்தறிவோம்.

இப்புல்லாங்குழல், இது, அவள், இக்குழந்தை, அங்கே, இவை, உன், உன்முகம், அந்தப்பூனை, இந்தமனிதன்

| அகச்சுட்டு | புறச்சுட்டு |
|---|---|
| இது | இப்புல்லாங்குழல் |
| அவள் | இக்குழந்தை |
| அங்கே | உன்முகம் |
| இவை | அந்தப்பூனை |
| உன் | இந்தமனிதன் |

01. பின்வரும் வாக்கியங்களில் உள்ள சுட்டுச் சொற்களை இனங்கண்டு அவை எவ்வகைச் சுட்டுக்கள் என எழுதுவோம்.

1. அவன் வீணை வாசிக்கின்றான்.

சுட்டுச்சொல் - அவன்

சுட்டுவகை - அகச்சுட்டு

2. அங்கே நடனம் செய்பவள் யார்?

சுட்டுச்சொல் - அங்கே

சுட்டுவகை - அகச்சுட்டு

3. தாமரைப் பூக்கள் இக்குளத்தில் உள்ளன.

சுட்டுச்சொல் - இக்குளம்

சுட்டுவகை - புறச்சுட்டு

4. உவன், கண்ணன் தானே?

சுட்டுச்சொல் - உவன்

சுட்டுவகை - அகச்சுட்டு

5. இது எங்கள் வீடு.

சுட்டுச்சொல் - இது

சுட்டுவகை - அகச்சுட்டு

6. அரசன் அந்த நாட்டை ஆண்டான்.

சுட்டுச்சொல் - அந்தநாடு

சுட்டுவகை - புறச்சுட்டு

7. இந்தமாதம் கடும் மழையாக உள்ளது.

சுட்டுச்சொல் - இந்தமாதம்

சுட்டுவகை - புறச்சுட்டு

8. தம்பி, இவன் யாருடைய மகன்?

சுட்டுச்சொல் - இவன்

சுட்டுவகை - அகச்சுட்டு

9. இது ஒரு நல்ல முடிவு.

சுட்டுச்சொல் - இது

சுட்டுவகை - அகச்சுட்டு

10. சோழமன்னனின் ஆட்சிக்குள் இந்த நாடும் இருக்கிறதா?

சுட்டுச்சொல் - இந்த நாடு

சுட்டுவகை - புறச்சுட்டு

## வினா எழுத்து

சூத்திரம் :

"எ,யா முதலும் ஆ,ஓ ஈற்றும்
ஏ இரு வழியும் வினாவாகுமே"

எ,யா,ஆ,ஓ,ஏ எனும் இவ்வைந்தும் வினாப்பொருளில் வரும் போது வினா எழுத்து எனப்படும்.

எ, யா எழுத்து - வினாச் சொல்லின் முதலில் வரும்.

உதாரணம் : என்ன?
யார்?

ஆ, ஓ எழுத்து - வினாச் சொல்லின் இறுதியில் வரும்.

உதாரணம் : அவனா?
அவளோ?

ஏ எழுத்து - வினாச்சொல்லின் முதலிலும் இறுதியிலும் வரும்.

உதாரணம் : ஏன்?
அவனே?

பின்வரும் சொற்களை வினாவெழுத்திற்கு ஏற்ப வகைப்படுத்துவோம்.

அவனே? ஏன்? யார்? என்ன? எங்கே? அதோ? அவையா? யாரோ?
ஏது? யாவை? எது? அவனா?

| முதலில் வரும் | இறுதியிலும் வரும் | முதலிலும் இறுதியிலும் வரும் |
|---|---|---|
| யாவை? | அதோ? | ஏன்? |
| யார்? | யாரோ? | ஏது? |
| என்ன? | அவனா? | அவனே? |
| எது? | அவையா? | எங்கே? |
| | | |

பின்வரும் வாக்கியங்களிலுள்ள வினா எழுத்துச் சொற்களை இனங்கண்டு அந்தச் சொல்லில் வரும் வினாவெழுத்தினை எழுதுவோம்.

1. நாளை வருவானா?
   - வினாவெழுத்துச் சொல் : வருவானா?
   - வினாவெழுத்து : ஆ

2. திருக்குறளை இயற்றியவர் யார்?

வினாவெழுத்துச் சொல் : யார்

வினாவெழுத்து : யா

3. போலி எழுத்து என்றால் என்ன?

| | | |
|---|---|---|
| வினாவெழுத்துச் சொல் | : | என்ன? |
| வினாவெழுத்து | : | எ |

4. தம்பி சாப்பிடானே?

வினாவெழுத்துச் சொல் : சாப்பிட்டானே?

வினாவெழுத்து : ஏ

5. பாண்டவர்கள் வனவாசம் சென்றது ஏன்?

| | | |
|---|---|---|
| வினாவெழுத்துச் சொல் | : | ஏன் |
| வினாவெழுத்து | : | ஏ |

6. சடையப்பவள்ளல் கம்பரை ஆதரித்தாரா?

வினாவெழுத்துச் சொல் : ஆதரித்தாரா?

வினாவெழுத்து : ஆ

7. இந்தக் கொரோனா எம்மை விட்டுப் போகுமோ?

வினாவெழுத்துச் சொல் : விட்டுப்போகுமோ?

வினாவெழுத்து : ஓ

8. நளவெண்பாவை எழுதியவர் யார்?

வினாவெழுத்துச் சொல் : யார்?

வினாவெழுத்து : யா

9. கௌரவர்களிடம் கண்ணன் தூது சென்றானா?

வினாவெழுத்துச் சொல் : சென்றானா?

வினாவெழுத்து : ஆ

10. உயிர் எழுத்து என்றால் என்ன?

வினாவெழுத்துச் சொல் : என்ன?

வினாவெழுத்து : எ

# இனவெழுத்து

இடம், மாத்திரைஅளவு, பொருள், வரிவடிவம் ஆகியவற்றில் ஒற்றுமையுடைய எழுத்துகள் இனவெழுத்துகளாகும்.

- உயிர் குறில் எழுத்துக்கு உயிர் நெடில் இனவெழுத்தாகும்.
- வல்லின எழுத்துக்கு மெல்லின எழுத்து இனவெழுத்தாகும்.

## உயிர்க் குறில் உயிர் நெடிலுக்கு இனமாகுதல்

| குறில் | நெடில் |
|---|---|
| அ | ஆ |
| இ | ஈ |
| உ | ஊ |
| எ | ஏ |
| ஒ | ஓ |

- ஐ,ஔ இரண்டு நெட்டெழுத்துகளும் ஒலிப்பின் அடிப்படையில் இ,உ ஆகியவற்றை இனமாகக் கொள்கின்றன.
  - ஐ இ
  - ஔ உ

## வல்லினத்திற்கு மெல்லினம் இனமாகுதல்.

| வல்லினம் | மெல்லினம் |
|---|---|
| க் | ங் |
| ச் | ஞ் |
| ட் | ண் |
| த் | ந் |
| ப் | ம் |
| ற் | ன் |

இடையினத்திற்கு இனம் இல்லை.

## செயற்பாடு

பொருத்தமான விடையின் கீழ் கீறிடுக.

1. உயிர்க்குறில் எழுத்தாகிய “இ”கரத்தின் இனவெழுத்து
    1. ஆ
    2. ஈ
    3. உ
    4. எ

2. “உ”கரத்தின் இனவெழுத்து

1. ஈ
2. ஒ
3. ஊ
4. ஏ

3. “க்”கர மெய்யின் இனவெழுத்து

1. ங்
2. ச்
3. ஞ்
4. ட்

4. “ஐ”காரத்தின் இனவெழுத்து

1. ஊள
2. இ
3. ஊள
4. ஈ

5. “ஔ”காரத்தின் இனவெழுத்து

1. உ
2. ஊ
3. எ
4. ஈ

6. “ட்”கர மெய்யின் இனவெழுத்து
   1. ண்
   2. த்
   3. ம்
   4. ந்

7. உயிர்க்குறில் எழுத்துகளின் இனமாக அமைவது

1. மெய்யெழுத்து
2. உயிர்நெடில் எழுத்து
3. வல்லின எழுத்து.
4. மெல்லின எழுத்து

8. வல்லின மெய்யின் இனவெழுத்தாக அமைவது
   1. உயிர்குறில் எழுத்துகள்
   2. உயிர் நெடில் எழுத்துகள்
   3. மெல்லின மெய்யெழுத்துகள்.
   4. இடையின எழுத்துகள்

9. இனவெழுத்து இல்லாத தொகுதி

1. மெல்லினம்
2. இடையினம்
3. வல்லினம்
4. உயிர்க்குறில்

10 வல்லினத்தின் இனவெழுத்துகள் முறையே

1. க்,ச்,ட்,த்,ப்,ற்
2. ங்,ஞ்,ண்,ந்,ம்,ன்
3. ங்,ஞ்,ன்,ண்,ம்,ந்
4. ங்,ஞ்,ந்,ன்,ம்,ண்

## பொருத்தமான இனவெழுத்துகளைத் தொடர்புபடுத்துக

| | |
|---|---|
| உ | ன் |
| ஒ | ம் |
| ச் | ஈ |
| த் | ஏ |
| ற் | ஊ |
| இ | ஞ் |
| எ | ந் |
| ப் | ஓ |

# போலி

- ஒரு சொல்லில் வரும் ஓர் எழுத்துக்குப் பதிலாக வேறு எழுத்து நின்று பொருள் வேறுபடாதிருப்பின் அது போலியாகும்.

- இது சொல்லின் முதலிலும், இடையிலும், இறுதியிலும் மாற்றம் பெறலாம்.

| | மொழி முதல் | மொழி இடை | மொழி இறுதி |
|---|---|---|---|
| இயல்பு | யமன் | இலஞ்சி | புந்தல் |
| போலி | நமன் | இலைஞ்சி | பந்தர் |

**பின்வரும் சொற்களை இயல்பு, போலி என வகைப்படுத்துவதுடன் அவை எவ்வகைப் போலி எனவும் எழுதுவோம்.**

ஞாயிறு நாயிறு மயல் மையல் அரைசு அரசு
அறன் அறம் முகம் முகன்

| இயல்பு | போலி | போலி வகை |
|---|---|---|
| ஞாயிறு | நாயிறு | முதற்போலி |
| மையல் | மயல் | முதற்போலி |
| அரசு | அரைசு | இடைப்போலி |
| அறம் | அறன் | இறுதிப்போலி |
| முகம் | முகன் | இறுதிப்போலி |
| | | |

கற்க கசடற

# நன்றி